24.06.2026

O.S.No.87/2025

PW2- ஜாஸ்மின் பாத்திமா – க/பெ முகைதீன் செய்யது அஜீஸ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.06.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. யார் இறப்பிற்கு நான் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தகப்பனார் அக்பரின் வாரிசு நாங்கள் என தாக்கல் செய்துள்ளேன்.

2. நானும், 2ம் வாதியும் அக்பர் முதல் மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

3. 3ம் வாதி முதலில் தெற்கு கடையத்தை சார்ந்த செய்யது இப்ராகிம் என்பவருடன் முதல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான்.

4. 3ம் வாதிக்கு முதல் திருமணம் ரத்தாக இருந்த நிலையில் என் தகப்பனார் அக்பரை 2வது திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. முதல் கணவர் இறந்த பின்பு தான் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார்.

5. அக்பருடன் 3ம் வாதிக்கு திருமணம் நடந்தது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல திருமண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

6. அக்பரின் முதல் மனைவி ஷரிபா என்பவர் இறந்ததற்கான இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. இறந்துபோன அக்பருக்கு 2 மனைவிகள் என்பதாலும், 3ம் வாதிக்கு இரண்டாவது திருமணம் என்பதாலும் வருவாய்நிலை ஆவணங்களின்படி எனக்கு வாரிசுசான்றிதழ் வழங்க இயலாது என்றால் சரியல்ல.

8. 3ம் வாதிக்கும் இப்ராகிம்க்கும் குழந்தைகள் உள்ளனவா என்றால் இல்லை

9. முறையான ஆவணங்களின்றி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி